### வெள்ளோட்டில்

# காலிங்கராயன் சிலை திறப்பு விழா

## அமைச்சர் ராஜா 19-ந் தேதி திறந்து வைக்கிறார்


காலிங்கராயர்

சென்னிமலை, ஜன. 16- வெள்ளோட்டில் வருகிற 19-ந் தேதி அமைச்சர் என்.கே.கே.பி.ராஜா காலிங்கராயன் சிலையை திறந்து வைக்கிறார்.

சரித்திரம் படைத்த காலிங்கராயன் 725 ஆண்டுகளுக்கு முன்பே நதி நீர் இணைப்புக்கு முன்னோடியாக அதாவது பவானி ஆற்றையும், நொய்யல் ஆற்றையும் கால்வாய் மூலம் இணைத்து சரித்திரம் படைத்தவர் காலிங்கராயர்.

### சிலை திறப்பு விழா

இவரது சிலை திறப்பு விழா வெள்ளோட்டில் வருகிற 19-ந் தேதி காலை 9 மணிக்கு நடக்கிறது. விழாவுக்கு சென்னிமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.சின்னுசாமி கவுண்டர் தலைமை தாங்குகிறார். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மணி முன்னிலை வகிக்கிறார். என்.டி.கண்ணுசாமி வரவேற்று பேசுகிறார்.

விழாவில் அமைச்சர் என்.கே.கே.பி.ராஜா கலந்து கொண்டு காலிங்கராயர் சிலையை திறந்து வைக்கிறார்.

### மத்திய-மந்திரி

விழாவில் மத்திய மந்திரி சுப்புலட்சுமி ஜெகதீசன் கலந்து கொண்டு "வெள்ளோடு காணியாளர்கள் வரலாற்று நூலை வெளியிட்டு பேசுகிறார். முதல் நூலை கார்வேந்தன் எம்.பி. பெற்றுக் கொள்கிறார்.

காலிங்கராயன் வாரிசு தாரரைவிடியல்சேகர்எம்.எல்.ஏ. கவுரவிக்கிறார். விழாவில் ஆர்.எம்.பழனிச்சாமி எம்.எல்.ஏ. காலிங்கராயரின் 37-ம் தலைமுறை வாரிசு சித்தார்த், ஏ.எம்.ஆர்.காலிங்கராயர், குமாரவலசு ஊராட்சி தலைவர் சந்திரகலா சக்திவேல், புலவர் ராசு, கனகபுரம் ஊராட்சி தலைவர் மகுடேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.